**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு மா.சந்திரமோகன்., பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் புரட்டாசி திங்கள் 09-ம் நாள்

2025-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25-ம் நாள் வியாழன்கிழமை

******

**இடைமனு எண். 03/2025-ல் - அசல் வழக்கு எண். 41/2024**

செந்தமிழ்செல்வன் .....மனுதாரர்/வாதி

...எதிராக...

ஜெயராமன் .... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 16.09.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு S.சுந்தரய்யா அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. T.நன்மாறன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

மனுவில் கண்ட ஆவணங்களை ஏற்றுக் கொள்ள அனுமதி அளித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி மனுதாரர்களால் இம்மனு உ.வி.மு.ச. கட்டளை-7 விதி 14-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

(i) மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மேற்படி வழக்கில் மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தொடர்ந்து அதில் இடைக்கால மனுவில் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, மேலும் ஆவணங்களை குறியீடு செய்ய விசாரணைக்கு

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.25 17:22:41 +0530

போடப்பட்டுள்ளது. இந்த நிலையில் மனுதாரர்/வாதி தரப்பில் முக்கிய ஆவணங்கள் தற்போது தான் கிடைத்து அவற்றை இத்துடன் தாக்கல் செய்துள்ளார். அவற்றை மனுதாரர்/வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது.

(ii) மனுதாரர்/வாதி வேண்டுமென்றோ அலட்சியமாகவோ முன்பே மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யாமல் இருக்கவில்லை. மேற்படி ஆவணங்களை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யாவிட்டால் மனுதாரருக்கு ஏராள கஷ்டமும் நஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே மனுவில் கண்ட ஆவணங்களை ஏற்றுக் கொள்ள அனுமதி அளித்து உத்தரவு பிறப்பிக்க வேண்டி மனுதாரரால் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்.**

(i) இம்மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலை நிற்கத்தக்கதல்ல. வாதி கோரும் பரிகாரமானது வாதிக்கு கிடைக்கதக்கதல்ல. வாதி தாவாவில் சொல்லியுள்ள சங்கதிகளை பிரதிவாதி முற்றிலும் மறுக்கிறார். மனுவில் தற்போது தான் ஆவணங்கள் கிடைத்துள்ளதாக சொல்லியுள்ள சங்கதிகளை பிரதிவாதி முற்றிலும் மறுக்கிறார். மேற்படி ஆவணங்கள் சட்டமுறனாக பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் அடிப்படையில் எந்தவித அனுபவமும், உரிமையும் இல்லாமல் தமது அரசியல் மற்றும் பொருளாதார செல்வாக்கினை பயன்படுத்தி பெறப்பட்ட சட்டமுறைக்கேடான ஆவணமாகும்.

(ii) மேலும் தாவா சொத்திற்கு கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக கிஸ்து ரசீதுகளும் கிராம வட்டாட்சியர் அவர்கள் வழங்கிய சிட்டா அடங்கலும் பிரதிவாதி வசம் உள்ளது. அவற்றினை வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதாக உறுதியளிக்கிறார். மேற்கண்ட ஆவணங்களை ஏற்றுக்கொள்ள கூடாது என்று நீதிமன்றத்தில் பிரார்த்திக்கப்படுகிறது. மேற்படி ஆவணங்களை தகுந்த சாட்சியங்களின் அடிப்படையிலேயே நீதிமன்றம் பரிசீலிக்க வேண்டுமாய்

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.25 17:22:48 +0530

பிரதிவாதி தரப்பில் பிரார்த்திக்கப்படுகிறது. எனவே மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும்.

3. இம்மனுவில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா ?**

5. <u>தீர்வு:</u>

(i) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/வாதி தரப்பில் முக்கிய ஆவணங்கள் தற்போது தான் கிடைத்துள்ளன என்றும், அவற்றை மனுதாரர்/வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(ii) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மனுவில் கண்ட ஆவணங்கள் சட்டமுறைக்கேடான ஆவணமாகும் என்றும் மேலும் தாவா சொத்திற்கு கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக கிஸ்து ரசீதுகளும் கிராம வட்டாட்சியர் அவர்கள் வழங்கிய சிட்டா அடங்கலும் பிரதிவாதி வசம் உள்ளது என்றும் அவற்றினை வழக்கு விசாரணையின்போது நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதாக உறுதியளிக்கிறார் என்றும் எனவே மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(iii) மனுதாரர்கள் தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்படபோவதில்லை. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று கருதி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.25 17:22:54 +0530

இம்மனுவை ஆவணங்களின் உண்மைத்தன்மை மற்றும் தொடர்புடைமை அடிப்படையில் அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவில், இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.25 17:23:00 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம் | – இல்லை – |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.09.25 17:23:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சீர்காழி.

**நேரிய/வரைவு உத்தரவு**
இடைமனு எண்.03/2025–ல்
அசல் வழக்கு எண்.41/2024
நாள்.25.09.2025.